தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# தமிழறிவுப் போட்டி
# மூன்றாம் வகுப்பு
# 2012

# தமிழறிவுப் போட்டி – 2012

ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்

(ஆரம்பப் போட்டியில் மூன்று சுற்றுக்கள் உள்ளன. ஒவ்வொரு சுற்றிலும் 10 கேள்விகள் உள்ளன.)

இப்போட்டியின் அனைத்துக் கேள்விகளும் ஆசிரியரால் வாசிக்கப்படும்.

ஆசிரியர் வாசிக்கும் போது மாணவர் விடையளிக்க முயன்றால் கேள்வி மறைக்கப்படுவதுடன் ஆசிரியர் வாசிப்பதும் நிறுத்தப்படும்.

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

சரியான விடைக்குப் பத்துப் புள்ளிகள் வழங்கப்படும்

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டும்.

பிழையான விடைக்கு ஐந்து புள்ளிகள் கழிக்கப்படும்

முதற் சுற்று

10 கேள்விகள்

1. தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் எத்தனை?

1. விடை:  247

2. உயிர் எழுத்துக்கள் எத்தனை?

2. விடை: 12

3. முக்கனிகள் எவை?

3 விடை:

மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம்

4. பொருட்களை வாங்கி விற்பவரை எப்படி அழைப்பர்?

4. விடை : வியாபாரி

5. முப்பொருள் என்ன?

5. விடை : பதி, பசு, பாசம்

6. கவிதைகள் எழுதுபவரை எப்படி அழைப்பர்?

6. விடை : கவிஞர், கவி

7. முத்தமிழ்களும் எவை?

7 விடை:

இயல், இசை, நாடகம்

8. மூவேந்தர்கள் யார்?

8. விடை:

சேர, சோழ, பாண்டியர்

9. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று கூறுக?

9. விடை:

சிலப்பதிகாரம்,

வளையாபதி,

குண்டலகேசி,

சீவகசிந்தாமணி.

10. கவிச்சக்கரவர்த்தி யார்?

10. விடை: கம்பர்

முதற் சுற்று முடிவடைந்தது

இரண்டாம் சுற்று - 10 கேள்விகள்

11. கப்பல் ஓட்டுபவரை எப்படி அழைப்பார்கள்?

11. விடை: மாலுமி

12. நிகழ்ச்சிகளை அறிவிப்பவரை எப்படி அழைப்பார்கள்?

12. விடை:

அறிவிப்பாளர்

13. திருக்குறளை எழுதியவர் யார் ?

13. விடை:

- திருவள்ளுவர்

14. ஆத்திசூடியை எழுதியவர் யார்?

14. விடை: ஔவையார்

15. ஐம்பொறி?

15. விடை:

கண், காது, மூக்கு, வாய், உடல்

16. ஐம்புலன்கள்?

16. விடை: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

- அடுத்த 3 கேள்விகள்:
- இசைக் கருவிகளைக் கண்டு பிடியுங்கள்.

- 17. நரம்புக் கருவிகளுள் ஒன்று. மிகவும் பழமை வாய்ந்தது

17. விடை: **வீணை**

18. கண்ணன் ஊதும் குழல்?

18. விடை: : புல்லாங்குழல்

19. இது ஒரு தோல் கருவி. கோயில்களில் இதைக் காணலாம்

19. விடை: மேளம்

20. உன் அப்பா எனக்கு மகன். நான் உனக்கு என்ன உறவு?

20. விடை: தாத்தா

இரண்டாம் சுற்று முடிவடைந்தது

மூன்றாம் சுற்று - 10 கேள்விகள்

- 21. “வீரன்”இதற்கு எதிர்ச் சொல் என்ன?
- 

21. விடை: கோழை

- 22. இவர் யார்?
- இவர் பத்திரிகைக்குச் செய்தி சேகரித்துக் கொடுப்பவர்.
-

22. விடை: நிருபர்

- 23. எனக்கு என்ன உறவு?
- என் அம்மாவின் தங்கையின் கணவன்?
-

23. விடை: சித்தப்பா

- 24. “மகிழ்ச்சி” இதற்கு எதிர்ச் சொல் என்ன?
- 

24. விடை: துக்கம், கவலை

- 25. சிலப்பதிகாரத்தின் கதாநாயகி யார்?
- 

25. விடை: கண்ணகி

- 26. “சூரியன்” இதற்கு வேறு சொல் என்ன?
- 

- 26. விடை: ஞாயிறு, பகலவன்

- 27. “உற்சாகம்” இதற்கு எதிர்ச் சொல் என்ன?
-

27. விடை: சோம்பல்

- 28. “வெற்றி” இதற்கு எதிர்ச் சொல் என்ன?
- 

- 28. விடை: தோல்வி

- 29. இவர் யார்?
- இவர் கதை கட்டுரை எழுதுபவர்.
-

29. விடை: எழுத்தாளர்

30) இவர் யார்?

இவர் நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறுபவர்.

30. விடை: நீதிபதி

மூன்றாம் சுற்று நிறைவுபெற்றது

# ஆரம்பப்போட்டி முடிவுற்றது

# அரை இறுதிச் சுற்று - 15 கேள்விகள்

- 1) குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?
  - திஅர்ப
-
-

1. விடை: அதிபர்

- 2. சிலப்பதிகாரத்தில் கண்ணகியை விட்டுக் கோவலன் யாரிடம் சென்றான்?
- 

2. விடை: **மாதவி**

- 3. “சந்திரன்” இதற்கு வேறு சொல் என்ன?
- 

3. விடை: திங்கள், நிலா

- 4. “நண்பன்” இதற்கு வேறு சொல் என்ன?
- 
- 

4. விடை: தோழன், சினேகிதன்

5. ➢ “அறிவாளி” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

➢

5. விடை: முட்டாள்

6. “உண்மை” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

➢

6. விடை

- பொய்

7. எனக்கு என்ன உறவு?
என் அப்பாவின் தம்பியின் மனைவி?

7. விடை

சித்தி

8. என்ன உறவு?

எனக்கு அவர் அம்மம்மா. நான் அவருக்கு என்ன உறவு?

8. விடை: பேரன், பேத்தி

- 9. குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?
  - வலபுர்

9. விடை: புலவர்

10. கண்ணகி எந்த நகரை எரித்தாள்?

10. விடை மதுரையை

11. “வீடு” இதற்கு வேறு சொல் என்ன?

11. விடை: இல்லம், அகம்

12. “பள்ளிக்கூடம்” இதற்கு வேறு சொல் என்ன?

12. விடை: பாடசாலை, கல்லூரி

13. “நல்லவன்” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

13. விடை:

- கெட்டவன்

14.

- “பணக்காரன்” இதற்கு எதிர்ச் சொல் என்ன?
-

14. விடை: ஏழை

15. ஆண்பால் (ஆண் என்றால்) “அவன்”. பெண்பால் (பெண் என்றால்) என்ன?

15. விடை

அவள்

# அரை இறுதிச் சுற்று நிறைவுபெற்றது

# இறுதிச் சுற்று (15 கேள்விகள்)

- 1. இவர் யார்?
- இவர் காவல் செய்பவர்.
-

1. விடை: காவல்காரன்

- 2. இவர் யார்?
- இவர் பள்ளிக்கூடத்தில் பாடம் சொல்லிக்கொடுப்பவர்.
-
-

2 விடை: ஆசிரியர்

- 3. சொல்லினுள் சொல் எது?
- 
- கோவலன்
- 
- 

3 விடை: கோ - அரசன், பசு

4. சொல்லினுள் சொல் எது?

- நாவலன்
-

4. விடை :நா - நாக்கு

- 5. சொல்லினுள் சொல் எது?

- மதுரை
-

5. விடை: மது - குடிவகை, துரை - ஐயா

6. இது காய்கறி வெட்டஉதவும். அது எது?

6. விடை: கத்தி

- 7. குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?
-
- சியஆரிர்

7. விடை: ஆசிரியர்

- 8. இச்சொல்லினுள் இன்னுமொரு சொல் இருக்கிறது. அது கிழமையைக் குறிக்கும். அது எது?

  - **ஆரவாரம்**

8. விடை : வாரம்

- 9. ஒரு சொல் மற்றவற்றில் இருந்து வேறுபடுகின்றது. ஒரு சொல்லைத் தவிர மற்றவை மூன்றும் வினைச்சொல்லாகவும் (verb, action word) வரலாம். அந்த வித்தியாசமான சொல் எது?
- ஆடு ஓடு நாடு மாடு

9. விடை: மாடு

- 10. ஒரு சொல் மற்றவற்றில் இருந்து வேறுபடுகின்றது. எல்லாம் உணவாக இருந்தாலும் ஒன்று சமைக்கும் முறையில் மற்றவற்றில் இருந்து வித்தியாசப்படுகிறது. அது எது?
- 
- தோசை அப்பம் இட்லி ரொட்டி

10. விடை:

இட்லி - இதனை அவிக்கவேண்டும்

- 11. ஒரு சொல் மற்றவற்றில் இருந்து வேறுபடுகின்றது. எல்லாம் மிருகமாக இருந்தாலும் ஒன்றை வளர்க்கும் முறை மற்றவற்றில் இருந்து வித்தியாசப்படுகிறது. அது எது?
-
- ஆடு மாடு நாய் குதிரை

11. விடை:

நாய் - இதனை பண்ணை மிருகமாக வளர்ப்பதில்லை

- 12. இச்சொல்லினுள் இன்னுமொரு சொல் இருக்கிறது. அது குரங்கைக் குறிக்கும். அது எது?
-

- **மந்திரம்**

12. விடை:

மந்தி

- 13. திருக்குறளில் உள்ள மூன்று பிரிவுகள் எவை?
-
-

13. விடை: அறம், பொருள், இன்பம்

14. நான் யார்?

நான் ஒரு மிருகம். எனக்கு தந்தம் உண்டு.

14. விடை: : யானை

15. நான் யார்?

நான் ஒரு பறவை. நான் தோகை விரித்து ஆடுவேன்.

15. விடை: மயில்

இறுதிச் சுற்று நிறைவுபெற்றது

நன்றி

மேலதிக வினாக்கள் தேவைப்பட்டால்.........

1. ஒருவரைப் பாராட்டி நடாத்தும் விழா என்ன?

1. விடை:

பாராட்டுவிழா

2. எமது கல்வி நிலையம் எப்போது வெள்ளிவிழா கொண்டாடியது?

2. விடை: இந்த வருடம் (2012ம் ஆண்டு)

3. திருக்குறளை வேறு எவ்வாறு கூறுவர்?

3. விடை: முப்பாநூல், தமிழ்மறை